(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 77.]

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 யூலை 12, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

சமுகமளித்தோர்:

கௌரவ கரு ஜயசூரிய, சபாநாயகர்

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ ரணில் விக்கிரமசிங்க, பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ வஜிர அபேவர்தன, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ ஜோன் அமரதுங்க, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கயந்த கருணாதிலக்க, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

கௌரவ ரவி கருணாநாயக்க, மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அகில விராஜ் காரியவசம், கல்வி அமைச்சர்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல, அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

கௌரவ மனோ கணேசன், தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

கௌரவ தயா கமகே, ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சர்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா, புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார, பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ சாகல ரத்நாயக்க, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ அர்ஜுன ரணதுங்க, போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

கௌரவ மலிக் சமரவிக்ரம, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன, சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

கௌரவ அப்துல் ஹலீம், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கபீர் ஹஷீம், நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

கௌரவ அஜித் பி. பெரேரா, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ ருவன் விஜேவர்தன, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்

கௌரவ சுஜீவ சேனசிங்க, அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல, உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த அலுவிஹாரே, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ லக்கி ஜயவர்தன, நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ நிரோஷன் பெரேரா, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ அஜித் மான்னப்பெரும, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ இரான் விக்கிரமரத்ன, நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ திலிப் வெதஆரச்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ வடிவேல் சுரேஷ், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ வசந்த சேனாநாயக்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ எட்வட் குணசேகர, காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

கௌரவ நலின் பண்டார ஜயமஹ, அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

கௌரவ கருணாரத்ன பரணவிதான, திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ லஸந்த அலகியவன்ன

கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே

கௌரவ சந்திம கமகே

கௌரவ பியசேன கமகே

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ சாந்த பண்டார

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ விதுற விக்கிரமநாயக்க

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன

கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க

கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன

கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ துலீப் விஜேசேகர

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ ச. வியாழேந்திரன்

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ ஞானமுத்து ஶ்ரீநேசன்

கௌரவ (திருமதி) சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மஹிந்த சமரசிங்க

கௌரவ சந்தித் சமரசிங்க

கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன

கௌரவ மாவை சோ. சேனாதிராசா

கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

கௌரவ கனக ஹேரத்

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்: (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கைச் சுங்கத்தின் வருடாந்தச் செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளை மற்றும் அறிக்கை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், பிரதம நீதியரசரின் ஒருப்பாட்டுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 26 ஆம் திகதிய 2116/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதியைச் சமர்ப்பித்து அவ்வொழுங்குவிதி, சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் முயற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் வாழ்க்கை தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி பிரிவின் செயலாற்றுகை அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து அவ்வறிக்கை, கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை, உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) (i) அநுராதபுரம், மூன்றாம் கட்டம், இல. 3029 இல் வதியும் திருமதி எல்.எச். கல்யாணி த சில்வாவினது 2019.02.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) அநுராதபுரம், குருந்தம்குளம், 3 ஆம் ஒழுங்கையில் வதியும் திரு. ஆர்.ஏ. காமினி ரணசிங்கவினது 2019.01.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார சமர்ப்பித்தார்.

(2) கட்டுகஸ்தோட்டை, பள்ளேதலவின்ன, இல. 105 இல் வதியும் திரு. ரீ.பீ. ஹிட்டிஹாமுவினது 2019.03.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் 30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

(மு.ப. 11.08 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

3. பாராளுமன்ற அமர்வுகள் : பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. பாராளுமன்ற அலுவல்கள்: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— எந்தவொரு சட்டத்தின் மூலமும் மரண தண்டனையை விதிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருப்பதனை இல்லாதொழிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள "மரண தண்டனையை இல்லாதொழித்தல்" தனியார் உறுப்பினர் சட்டமூலத்தினை அரசாங்க வர்த்தமானியில் இன்றே பிரசுரிப்பதனை இயலச் செய்வதற்காக 52 மற்றும் 53 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் இடைநிறுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5. இலங்கையில் இன மற்றும் சமய சகவாழ்வை உறுதி செய்வதற்காக அது பற்றி ஆராய்ந்து தனது சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 2018 செப்டம்பர் 07 ஆம் திகதி சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்பட்ட இலங்கையில் இன மற்றும் சமய சகவாழ்வை உறுதி செய்வதற்காக அது பற்றி ஆராய்ந்து தனது சிபாரிசுகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு, தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை 2018 செப்டம்பர் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாகப் பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தினால் இடைக்கால அறிக்கையின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இறுதி அறிக்கையை முன்வைப்பதற்கு குறிப்பிட்ட விசேடகுழுவிற்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கால எல்லை பாராளுமன்றத்தின் 102 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம் 2020 சனவரி 12 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. உயர் பதவிகள் பற்றிய குழு: பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,—124 (1) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016 பெப்ரவரி 26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், 2019 யூலை 11 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு உயர் பதவிகள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் பதினேழு (17) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. ஒத்திவைப்பு (சுகாதாரம், போசணை மற்றும் சுதேச அமைச்சுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்) : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்குவாராக" என துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.03 மணிக்கு கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்கினார்.)

அப்போது கூட்ட நடப்பெண்ணின்மை அக்கிராசனத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டமையால், பாராளுமன்றம் கணக்கிடப்பட்டது. கூட்ட நடப்பெண்ணின்மை காரணமாக தலைமை தாங்கும் உறுப்பினரால், 11 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையினடிப்படையில் பி.ப. 4.18 மணிக்கு வினாவின்றிப் பாராளுமன்றம், 2019 யூலை 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.